# எருமப்பட்டி அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் 68 வது குடியரசு தின விழா

நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் **68வது குடியரசு தின விழா** 26.01.17 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவை கல்லூரியின **தாளாளர் திரு M.மணி அவர்கள் தலைமைதாங்கி துவக்கி வைத்தார்.** இவ்விழாவில் கல்லூரியின் **முதல்வர் முனைவர். T. பரிதிமாற் கலைஞன்** அவர்கள் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்தார் கல்லூரியின் **துணை முதல்வர் முனைவர். A. நடராஜன்** அவர்கள் மற்றும் பல்வேறு துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டார்கள்.

**கல்லூரியின் முதல்வர் முனைவர். T. பரிதிமாற் கலைஞன் அவர்கள் பேசுகையில்**

இன்று வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த 68வது குடியரசு தின விழாவில் மாணவர்களாகிய நீங்கள் உங்கள் கல்வியறிவோடு பொதுஅறிவையும் பல்வேறு திறமைகளையும் வளர்த்துக்கொண்டு பல யுக்திகளையும் தொழில்நுட்பங்களையும் கண்டறிந்து அதை நம் நாட்டில் புகுத்தி நம் நாடு முன்னேற முன்நிற்க வேண்டும் அதற்கான ஒரு வலிமை மிக்க சக்தி தான் கல்வி. ஆதலால் ஒழுக்கமும் பண்பாடு நிறைந்த வாழ்க்கை நீங்கள வாழ வேண்டுமானால் தன்னம்பிக்கை நிறைந்த தரமான கல்விதான் உங்களுக்கு தேவை. இதை அன்றாடம் கல்வியோடு கலந்து தன்னம்பிக்கையும் அளித்துவருகிறது, இக்கல்லூரி. கல்வியறிவு பொதுஅறிவு புதியன பகுத்துதல் சமுக சேவை விளையாட்டு சிறந்த நிறவனங்களில் வேலைவாய்ப்பு போன்றவற்றை அளிப்பதையே தாரக மந்திரமாக கொண்டது நம் கல்லூரி.

ஆதலால், மாணவர்களாகிய நீங்கள் இந் நாட்டிற்கும் உங்கள் பெற்றோர்களுக்கும் ஆசிரிய பெருமக்களுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் பொறியியல் மாணவர்காளாகிய நீங்கள் உங்களை சார்ந்த துறைகளில் பல அறிவியல் கண்டுபிடிப்புகளை இந்த நாட்டிற்கு பயனுள்ள வகையில் உருவாக்க வேண்டும் என்றும் அதற்காக நீங்கள் உங்களை தயார்படுததிக் கொள்ள கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் கூறினார்.

68வது குடியரசு தின விழாவை முன்னிட்டு நாட்டு நல பணித்திட்டத்தின் சார்பாக ‘‘தேசிய ஒருமைப்பாடு’’ ‘‘ தொழிலநுடப வளாசசியில இந்தியா’’ என்ற தலைப்புகளில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, மற்றும் ஓவியப் போட்டி நடைபெற்றது. இப்போட்டிகளில் கல்லூரி மாணவ மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டு சான்றதழ் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள பல்வேறு துறைத் தலைவர்களும், மற்றும் பேராசிரியர்களும் செய்திருந்தனர்.